நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : தொடக்கநிலை

## Level : Basic

***June 2013***

வினாக்கள் : 30

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

- மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும். (ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**For questions 1 to 7, choose the sentence that best describes the action shown in the picture.**

**1 முதல் 7 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.**



1. இந்த படத்தில் ____________________

    (a) ஆடுகள் பால் குடிக்கின்றன.

    (b) ஆடுகள் தண்ணீர் குடிக்கின்றன.

    (c) ஆடு தண்ணீர் குடிக்கிறது.

    (d) மான்கள் தண்ணீர் குடிக்கின்றன.



2. இந்த படத்தில் ____________________

    (a) மயில் தோகையை விரித்து நிற்கிறது.

    (b) மயில் சிறகை விரித்து நிற்கிறது.

    (c) மயில் இறக்கையை விரித்து நிற்கிறது.

    (d) மயில் உணவை பார்த்து நிற்கிறது.



3. இந்த சிறுவர் சிறுமியர் _________________

    (a) ஓடி விளையாடுகிறார்கள்.

    (b) பந்து விளையாடுகிறார்கள்.

    (c) கைபந்து விளையாடுகிறார்கள்.

    (d) சிரித்து விளையாடுகிறார்கள்.



4. இந்த படத்தில் உள்ள சிறுவன் ______________

(a) சதுரங்கம் விளையாடுகிறார்.

(b) சதுரங்கத்தை பார்த்து கொண்டு இருக்கிறார்.

(c) மரபொம்மையை தொட்டு விளையாடுகிறார்.

(d) மரபொம்மையை வரிசையாய் அடுக்குகிறார்.



5. படத்தில் உள்ள சிறுமி ____________________

(a) பழத்தை பார்த்து பயப்பிடுகிறார்.

(b) பழத்தை மணந்து பார்க்கிறார்.

(c) பழத்தை கடித்து சாப்பிடுகிறார்.

(d) வாயை ஆ என்று காட்டுகிறார்.



6. மோகனும் வனிதாவும் _____________________

(a) கடைக்கு போகிறார்கள்.

(b) பள்ளிக்கு ஓடிப் போகிறார்கள்.

(c) பள்ளிக்கு நடந்து போகிறார்கள்.

(d) ஓடுகிறார்கள்.



7. இந்த படத்தில் _______________________

(a) அம்மா படம் வரைகிறார்.

(b) ஆசிரியர் கணக்கு பாடம் நடத்துகிறார்.

(c) மாணவர் கணக்கு பாடம் நடத்துகிறார்கள்.

(d) ஆசிரியர் படம் வரைகிறார்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**Read and understand the Poem "யானை" and answer the questions 8 to 11.**
**யானை பாட்டை வாசித்து அவற்றில் இருந்து அறிந்த கருத்தைக் கொண்டு 8 முதல் 11 வரை உள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**



**பெரிய யானை வந்தது**
**சிறிய கண்ணால் பார்த்தது**
**அகன்ற காதை ஆட்டியே**
**அசைந்து அசைந்து நடந்தது**

8. எந்த மிருகத்தை பற்றிய பாடல் இது?

(a) யானை
(b) பூனை
(c) புலி
(d) சிங்கம்

9. யானையின் கண் எப்படி இருந்தது?

(a) பெரியதாக
(b) சிறியதாக
(c) குறுகியதாக
(d) அகன்றதாக

10. யானை அகன்ற காதை ______________________

(a) ஆட்டியது.
(b) நடந்தது.
(c) ஓடியது.
(d) பார்த்தது.

11. பெரிய யானை எப்படி நடந்தது?

(a) வளைந்து வளைந்து
(b) அசைந்து அசைந்து
(c) குதித்து குதித்து
(d) துள்ளி துள்ளி

**For questions 12-13 choose the correct spelling of the underlined word that is spelt incorrectly in the given sentence.**
**12-13 கேள்விகளில் பிழையான ஒரு சொல் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான சொல் எது?**

12. அகத்தின் அளகு முகத்தில் தெரியும்.

(a) அழகு
(b) அலகு
(c) அளவு
(d) அழுக்கு

13. நாங்கள் வருகிறேன்.

(a) வருகிறாள்
(b) வருகிறோம்
(c) வருகிறான்
(d) வருகிறார்கள்

**For questions 14 to 15, choose the best answer.**
**14 முதல் 16 வரையுள்ள வினாக்களில் ஒவ்வொரு கோடிட்ட இடத்திலும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

14. இப்பொழுது வெளியே மழை பெய்து கொண்டு ________________

(a) இருந்தது.
(b) இருக்கும்.
(c) இருக்கின்றது.
(d) இருக்கின்றன.

15. குமரன் நாளை பேச்சு போட்டியில் ________________

(a) பேசுகிறான்.
(b) பேசுகிறாள்.
(c) பேசுகிறோம்.
(d) பேசுவான்.

**For questions 16 to 18 choose the word that has the closest meaning to the underlined word.**
**16 முதல் 18 வரை கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.**

16. சூரியன் கிழக்கு திசையில் உதித்தது.

(a) தோன்றியது
(b) வந்தது
(c) எழுந்தது
(d) நின்றது

அடுத்த பக்கத்தில் தொடரும்.

17. அம்மா நிவேதாவை <u>நித்திரையில்</u> இருந்து எழுப்பினாள்.

(a) உறக்கத்தில்
(b) படிப்பதில்
(c) விழிப்பதில்
(d) உட்கார்ந்திருப்பதில்

18. ஆசிரியர் <u>பெற்றோரை</u> அழைத்து வரும்படி கூறினார்.

(a) தாத்தா பாட்டியை
(b) மாமா மாமியை
(c) அம்மா அப்பாவை
(d) அத்தை மாமாவை

## For questions 19 to 21 choose the word that has the opposite meaning to the underlined word.

## 19 முதல் 21 வரை கோடிட்ட சொல்லுக்கு எதிர் கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.

19. இனியன் சந்திராவை விட சிறிது <u>உயரம்</u>.

(a) அகலம்
(b) நீளம்
(c) குள்ளம்
(d) வெள்ளை

20. வனிதா <u>பெரிய</u> ஏணியில் ஏறி பூவை பறித்தாள்.

(a) நீளமான
(b) சிறிய
(c) உயரமான
(d) குட்டையான

21. அந்த <u>கறுப்பு</u> பை பார்க்க அழகாக இருந்தது.

(a) சிவப்பு
(b) மஞ்சள்
(c) வெள்ளை
(d) நீலம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

## For questions 22 to 23 rearrange the sentences in order.
**22-23 கேள்விகளுக்கு தரப்பட்ட வசனங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.**

22.
1. ஆசிரியர் எல்லோரையும் ‘‘சரிகமபதநி’’ பாடச் சொன்னார்.
2. ஆசிரியர் பாட்டு புத்தகத்தை எடுத்து மேசையில் வைக்கச் சொன்னார்.
3. பள்ளியில் பாட்டு வகுப்பு ஆரம்பித்தது.
4. மாணவர்கள் ‘‘சரிகமபதநி’’ பாடினார்கள்.

(a) 1,2,3,4 (b) 3,2,1,4 (c) 2,1,3,4 (d) 3,1,2,4

23.
1. வாணியை அம்மா பள்ளிக்கு செல்லுவதற்கு ஆயத்தம் ஆகும் படி சொன்னார்கள்.
2. வாணி சாமி கும்பிட்டு வந்து சாப்பிட்டாள்.
3. புத்தகப் பையை எடுத்துக் கொண்டு பள்ளிக்கு புறப்பட்டாள்.
4. வாணி பல் தேய்த்து குளித்து சீருடை அணிந்தாள்.

(a) 4,3,2,1 (b) 1,2,3,4 (c) 1,3,4,2 (d) 1,4,2,3

## Read and understand the Poem “பாப்பா பாட்டு” and answer the questions 24 to 27.
**பாப்பா பாட்டை வாசித்து அவற்றில் இருந்து அறிந்த கருத்தைக் கொண்டு 24 முதல் 27 வரை உள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

<u>பாரதியாரின் பாப்பா பாட்டு</u>



ஓடி விளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
ஒரு குழந்தையை வையாதே பாப்பா
ஓடி விளையாடு பாப்பா

பாலைப் பொழிந்து தரும் பாப்பா
அந்த பசு மிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்து வரும் நாய் தான்
அது மனிதர்க்கு தோழனடி பாப்பா.

24. பாரதியார் யாருக்காக இந்த பாடலை பாடியுள்ளார்?

(a) பசு
(b) பாப்பா
(c) நாய்
(d) மனிதர்

25. பாரதியார் பசு என்ன பொழிந்து தரும் என்று கூறுகிறார்?

(a) வால்
(b) பால்
(c) தோழன்
(d) பாப்பா

26. பாப்பா என்ன செய்ய வேண்டும் என்கிறார்?

(a) ஓடி விளையாடு
(b) வைது விளையாடு
(c) ஓய்ந்து விளையாடு
(d) பிடித்து விளையாடு

27. இந்த பாடலில் நாய் எதை குழைத்து வருகிறது?

(a) வாய்
(b) வால்
(c) பால்
(d) பாய்

## Questions 28-30 : Read the paragraph and identify the missing words and write them against the question numbers in the answer sheet.
## வினாக்கள் 28-30 : பின்வரும் பந்தியில் விடுபட்ட சொற்களை விடைத்தாளில் தரப்பட்ட இடத்தில் எழுதுக.

அடுத்த வாரம் இரண்டாம் தவணை விடுமுறை தொடங்குகிறது. நாங்கள் இம்முறை கன்பரா (28)________________________________________ . பிரிஸ்பேனிலிருந்து மாமா (29)________________________________________ வருகின்றார்கள். நீண்ட காலத்தின் பின் நாங்கள் எல்லோரும் (30)________________________________________ உல்லாசப் பயணம் செல்கிறோம். எப்போது விடுமுறை வரும் என எதிர்பார்த்திருக்கிறேன்.